முருகப்பெருமான் துணை

**மகான் இடைக்காடர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

15.07.2021, வியாழக்கிழமை

1. ஆறுமுகனார் ஞான வடிவாய்
அவதாரம் புரிந்த அரங்கனே
மாறுதலை உலகம் அடைய
மகானாய் வந்த ஞான தேசிகனே
2. தேசிகனே உன் அவதாரம் உலகறிய
துல்லிய ஆசிதனை பிலவமிதுனதிங்கள்
ஆசிபட முப்பானோர் திகதி குருவாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 31ம் நாள், 15.07.2021 வியாழக்கிழமை)
அருளுவேன் இடைக்காடர் யானும்
3. யானும் உலகமக்கள் பாதுகாப்புற
உயர் ஞான வழிதனை உரைப்பேன்
ஞானமெனும் பிரணவ சக்தியை
நம்பகமுற வேதமாக அருளும்
4. அருளும் அரங்கமகா ஞானியே
அகிலத்தின் ஆபத்தை வெல்லும்
அருளும் வரமும் கொண்ட சக்தி
அவசியம் அவதாரபலம் அறிந்து
5. அறிந்து கலியுக மக்களெல்லாம்
ஆற்றல் தரும் பிரணவக்குடிலுக்கு
வருகை புரிந்து தொடர்ந்திடவே
வணங்கி ஆசி தீட்சை பெற்றிடவே
6. பெற்றிடவே உலக மக்களுக்கு
பேரிடரில் மரண பயம் விலகி
உற்றதொரு உயிர் பாதுகாப்பும்
உணவு பஞ்சம் பசிபிணி இல்லா
7. பிணி இல்லா பெரும் ஆற்றலாக
பேருலகம் ஞான சக்தி பரவியே
தணிகாசலன் அருளும் ஆசியும்கூட
தனித்துவமும் பாதுகாப்பும் காண்கும்
8. காண்கவே இந்த அற்புதத்தை
கலியில் செய்து காக்க
உண்மை ஆன்மீக வழிகளை
உயிர் கொலை நீக்கி தயவெனும்
9. தயவெனும் சக்தி கொண்டுமே
தவமாக மக்களுக்கு அருளிட
நேயமிக்க அரங்க ஞானியரின்
ஞான வழிகளை ஏற்றுத்தொடர

10. தொடரவே துன்பங்கள் ஓடும்
தூய ஞான வாழ்வாக மாறி
சுடரெனும் சரவண சக்தி வழி
சுபிட்சமும் வளமும் கண்டு சிறப்பர்

11. சிறப்பறிவு ஊட்டும் தலைவனாம்
சிவராஜ யோகி அரங்கனுடன்
மறுப்பின்றி இடைக்காடனும் அருள
மக்களே வாரீர் கடைத்தேற்றம் பெற
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—